உ

திருச்சிற்றம்பலம்.

நாகம

# கூளப்பநாயக்கன்

காதல்.

இஃது

சுப்பிரதீபக்கவிராயரால்

பாடப்பட்டது.

இவை

சிதம்பரம்.

கருணானந்தசுவாமிகளால்

பரிசோதித்தப்பிரதிககிணங்கச்

சிந்தாத்திரிப்பேட்டை

நாராயணசாமிமுதலியார்

அண்டெஸன் அவர்களது

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1891

௧௮௯௧௵

சிவமயம்.

# கூளப்பநாயக்கன்காதல்.

(*)

## காப்பு.

வெண்பா

பேராரும்பெஞ்சைப்பெரியநாகேந்திரன்மேற்
சீராருங்காதலையான்செப்பவே-நேராரும்
அக்கனிதாச்சொலிமுனப்பனைவலத்தில்வரும்
கைக்கசமுகக்கடவுள்காப்பு.

பொன்மாதுமேவுதிம்மராயரருள்பூண்டிருக்கும்
நன்மாணிதிபெரியநாயகன்மேல்காதல்சொல் (௧)
வந்ததுவுசொன்மதுரவாக்குதவியெம்பொருளுந்
தந்துதவவேண்டுமெங்கள்தந்திமுகத்தோனே (௨)
ஆளும்பெருமாளகோபிலமால்மெய்யருளெந்
நாளும்பெரும்பெரியநாயகன்மேல்காதல்சொல் (௩)
ஏடுமணிவடமுமேந்துஞ்சரஸ்வதியே
யாடுமயிலேறிவருமையனேமுன்னடவாய் (௪)
கோமுனிவர்கொண்டாடுங்கூடம்பரஞ்சோதி
மாமுனிவர்செம்பொன்மலர்ப்பாதநான்மறவேன் (௫)
நாட்டுபுகழ்பெரியநாயகன்மேற்காதலைநான்
சூட்டுகவிநாவலர்முன்சொல்லத்துணிந்ததுதான் (௬)
தானந்தவயோகதத்துவமில்லாவொருவன்
ஞானந்தெளிந்தவர்க்குநல்லறிவுசொல்வதொக்கும் (௭)
தெள்ளமிர்தமூட்டியுரைத்திதிவளர்த்தெடுத்தோர்
கிள்ளைகுழறுமொழிகேட்குமகிழ்வதுபோல் (௮)
நன்னயவில்வேள்பெரியநாகேந்த்ரனென்கவியி
லென்னவழுக்கண்டாலுமின்பமெனக்கொண்டருள்வான் (௯)
தேனளந்தகானவர்க்குத்தேவராமுதளக்க
வானளந்துநிற்கும்வராகரிகிவேந்தன் (௰)
கன்னிமுனையொடுங்கைகலந்ததுபோற்
பொன்னிகலந்தபுனற்குடபமாநதியான் (௧௧)

வண்ணைகருவிழிமுலையார்மஞ்சள்நீராரோடிப்
பண்ணைப்பயிர்வளர்க்கும்பாண்டிவளநாடன் (௧௨)

வட்டமதிக்களங்கமாறத்தடவுதல்போல்
இட்டகொடியாடுமியல்சூழ்நவபுரியான் (௧௩)

கொத்தார்கருங்குழலார்க்குத்துமுலைபாயமணி
முத்தாரபின்னலிடுமுல்லைத்தொடைமார்பன் (௧௪)

ஓகைதந்துபோர்களத்திலுட்புகுந்துதான்முடுகி
வாகைகந்துமீண்டுவரும்வாகைநடனப்பரியான் (௧௫)

சண்டையிற்பொருங்கெடித்தலந்தகர்த்துவஞ்சரைக்கைக்
கொண்டெடுத்தறைந்துரப்புகும்பவுக்ரகுஞ்சரத்தான் (௧௬)

விண்பிறையைவெல்லநிலமீதின்முளைத்தெழுந்த
புன்பிறைபோலோங்குத்தவளக்குடையுடையான் (௧௭)

உடைதிரைகள்முறுகடலொலியுமுகிலிடியுமென
வடைபலர்கள்ரெவிகுடையவதிருமொலிமணிமுரசான் (௧௮)

அஞ்சின்வாசிலிருஞ்சம்புபோளொடிமட்டு
மிஞ்சினர்மார்புநலிவிம்படக்குமாணையினன் (௧௯)

வட்டநிலம்புரக்குமாரன்குமாரவர்க்கப்
பட்டமெனக்கட்டிவைத்தபட்டாபிஷேகபரன் (௨௰)

மிக்கவருட்சொக்கேசர்மீனட்சிசம்பருளால்
திக்குவிசயஞ்செலுத்துகின்றசெங்கோலான் (௨௧)

சீற்றமுடனேசான்சிவிகையிலேறுமுன்னே
வேற்றரசர்விண்ணிடப்போர்வென்றுவருஞ்சேனையினன் (௨௨)

கற்கோட்டையென்றவர்மேற்கண்சிவந்துகண்டவர்செம்
பொற்கோட்டையென்னப்புகழுநிலைகோட்டையினன் (௨௩)

சிந்தமகூளங்கஜெகராஜகண்மணிபோல்
வங்கதுரைசிங்கமெங்கள்மால்பெரியநாகேந்த்ரன் (௨௪)

வாணிபுகளவல்லக்கர்வார்குலத்தைக்கொண்டுவந்த
கோணியெனும்பெஞ்சைத்துரைபெரியநாகேந்த்ரன் (௨௫)

பொன்னிலங்கவச்ரப்பொடியிலங்கப்பொற்கதவு
முன்னிலங்கப்பொன்னிலங்கமுத்திலங்குவாசலினன் (௨௬)

ஒட்டகடமாரைத்தொலிமுழங்கப்பேரிசைதம்
பட்டமுழங்கப்பரிமுழங்கவாசலினன் (௨௭)

கட்டிவருஞ்சிங்களத்தார்கப்பம்வரக்காரனை
மூட்டிவரச்சினர்திறைகொண்டுவரும்வாசலினன் (௨௮)

ஆடைவழங்கமனம்வழங்கயாசகர்க்கு
மாடைவழங்கமனுவழங்கும்வாசலினான் (௩௯)
சேலாடுங்கூர்விழியார்சென்றாடக்கைவசந்தன்
கோலாடப்பங்கயப்பெண்கூத்தாடும்வாசலினான் (௩௰)
மாமறைநூல்பொய்ற்றாலும்வாரிதிநீர்பொயத்தாலும்
சோமரவிபொய்த்தாலுஞ்சொன்னமொழிபொய்த்தான் (௩௧)
அண்டாதருவுக்குமருங்காமதேனுவுக்குங்
கொண்டல்தனக்குங்கொண்டைபயிற்றுசெங்கரத்தான் (௩௨)
சித்தசராசேந்தான்றிருமலைகண்டமன்னன்
மைத்துனவேளாகவருபெரியநாகேந்த்ரன் (௩௩)
நீளும்பெருவாழ்வுநீதிகளுமேலோங்க
ஆளும்புவிபுரக்குமந்நாளிலேயொருநாள் (௩௪)
ஆரணஞ்சேர்வையையருந்தீர்த்தங்காணாடி
நாரணனைத்தாள்போற்றிநாமதீர்த்தம்பருகி (௩௫)
மிக்ககனகாரியப்பேர்வித்துவசனங்கள்துரை
மக்களுடனின்பாசவர்க்கவமுதருந்தி (௩௬)
சந்தனங்கஸ்தூரிசவ்வாதுகதம்பம்பூசிச்
சுந்தரஞ்சேர்முத்துத்துராயிலங்கப்பாகைகட்டி (௩௭)
மாணிக்கம்பச்சைவயிரவயிடூரியத்தா
லாணிப்பொன்னார்சமைத்தவாபரணமும்தரித்து (௩௮)
சங்கீதம்பாடச்சகலசனமும்போற்றச்
சிங்காசனக்கொலுவிற்றேவேந்திரன்போலிருந்தான் (௩௯)
அந்தமணிமண்டபமாஸ்தானந்தன்னிலையன்
சிந்தையுற்றுவேட்டையின்மேற்சென்றுவரவேண்டுமென்று (௪௰)
கட்டியறைநோக்கிக்கனவேட்டைக்காரருக்கும்
பட்டணத்துச்சேனாபதிகளுக்குஞ்சொல்லுமென்றான் (௪௧)
அங்கிருந்தகோமானரண்மனையினுட்புகுந்து
தங்கரேக்கென்னத்தயங்கிநிசார்தொட்டிறுக்கி (௪௨)
துப்பட்டாகட்டிவச்ரச்சோடிட்டுத்துணிகட்டி
யொப்பிட்டாம்கச்சையுடைப்பட்டையூடுகட்டி (௪௩)
வர்ணமணியாழிவனசமலர்க்கையிலிட்டுச்
சொர்ணமயமாச்சமைத்ததோர்க்கலசம்காலிலிட்டு (௪௪)
வாய்ந்தவிறைவிட்டால்மருவலர்கள்மார்புறையாப்
பாய்ந்தசமுதாபொகலைனதநுவிற்பிடித்து (௪௫)

கேழல்புலியானைக் கெர்வக்களையடக்க
வாளிமலை முழைவிட் டாலித்தெழுந்ததுபோற் (௪௬)
புள்ளிநுங்கசூர்கெடுவேற் போசனரண்மனையி
னுள்ளிருந்துகோட்டையொலிமுகத்துவாசல்வந்தான் (௪௭)
கொற்றகுடைபிடிக்ககொம்பூதப்பேரிகையும்
வெற்றிமுரசுங்கொளிக்கவிரசின்னந்தான்முழங்க (௪௮)
காலின்கடுமைகளைக்கார்கடுமைபாக்குமிதன்
காலின்கடுமையெனுங்கந்துகமேற்கொண்டருளி (௪௯)
வெற்றிவடிவாள்பிடித்துவெம்பரியின்மீதேறிச்
சுற்றமெனச்சுற்றுந்துரைமக்கள்சூழ்ந்துவர (௫௰)
வீரியப்பிரதானிகளுமெச்சுதளகர்த்தர்களும்
காரியப்பேர்மணியகாரர்கருணீகர்களும் (௫௧)
தாக்குதுடிபூழியப்ரதாபவசிகாரரும்
ஆக்குமிகுசேர்வையர் குறிக்காரர்களும் (௫௨)
அச்சமில்லாராணுவப்போரத்தனையுஞ்சோடிகட்டிக்
கச்சைகட்டியாயுதமுங்கையுமாய்முன்னடக்க (௫௩)
சிங்கத்தையாளுலுஞ்சென்றுகுத்தியெங்கோமான்
தங்கப்பதக்கந்தனைவாங்கவேண்டுமென்றும் (௫௪)
கண்டப்பெரும்புலியைக்கைவேலாற்கொன்றுபுலித்
தண்டைமிகுவிருதுதான்வாங்கவேண்டுமென்றும் (௫௫)
துட்டஞ்செயும்புலியைச்சுட்டங்கவெம்புலித்தோ
லொட்டும்பரிசைக்குறித்துவரவேண்டுமென்றும் (௫௬)
வெண்கவரிவெங்கள்திம்மாராயருக்குவீசவெள்ளை
வண்கவரிமானைவெட்டிவால்துணிக்கவேண்டுமென்றும் (௫௭)
வைத்திடும்வைப்பாட்டிபிள்ளைமார்பு குடைமைபண்ணக்
குத்திப்புலிநகங்கள்கொண்டுவரவேண்டுமெனறும் (௫௮)
கொண்டைவிளையகுடியாள்முடிமயிர்க்கு
மண்டுகருங்கவரியாள் துணிக்கவேண்டுமென்றும் (௫௯)
வாய்த்தகரடிமணிமிரர்பிச்செடுத்துக்
கூடதிக்கிடுமருந்துகூட்டியிடவேண்டுமென்றும் (௬௰)
ஒன்றொன்றொருவர்மனதுற்றுச்சிலரேச
வென்றிவெடிக்காரர்வேற்காரர்முன்னடக்க (௬௧)
தானைபிடித்தசவளப்பெருக்கமுயர்
வானம்விழுதுவிட்டவண்ணமாம்முன்னடக்க (௬௨)

கொண்டேகுந்தன்மேளக்கொள்கைபோற்பேசுமுகி
லுண்டோவிலையோவென்றொட்டகமாணுந்துவர (௬௩)
கொட்டுந்துடியுங்குறித்தகடுக்கொம்புகளும்
கட்மேபெருங்கலையுங்கைவேட்டைக்கத்திகளும் (௬௪)
காட்டுப்புலிக்கழுத்தைக்கௌவும்புலிபோலக
கூட்டமிட்டஞானிகளுங்குத்திட்டியுநகவனும் (௬௫)
சால்வயிறுமூன்றுமுழங்காடிகளுஞ்செங்கலையுங்
காலிலிடுதோலடியுங்காங்கிட்டகச்சையுமாய (௬௬)
கானவர்கள்வந்துகண்டுகைகுவித்துமுன்னோடச
சேனைநடுவெள்ளைச்செயடாலிணைத்துவர (௬௭)
போயனுமன்பாய்ந்தபுகழ்பெருமர்கதிரைப்
பாயத்திரிவதுபோற்பங்கருட்டாலேக (௬௮)
சந்த்ரோதயம்போற்றயக்குஞ்சுருட்டிவரச்
செந்தூளிகண்வெடசினங்குடிவாங்க (௬௯)
தம்பட்டவோசைதனக்குமகநங்கலங்க
கொம்புத்தொனிகேட்டுக்கொச்சிமலையேற (௭௰)
மங்களஞ்சேர்பெஞ்சைநகர்வாழ்பெரியநாகேந்த்ரன்
எங்கள்புரான்வேட்டைக்கெழுந்தநளுமவவழியில் (௭௧)
போத்தொன்றிடத்திருந்துபோய்வலத்தோர்பூமரத்தில்
வாய்த்தபேடொன்றைமருவிக்குரலெழும்ப (௭௨)
மண்டலிகர்கண்டகனெனுமால்பெரியநாயகவுத்
தண்டமதுகண்டுநகைதந்துமனமகிழ்ந்து (௭௩)
ராசசகுனமென்னராசேந்த்ரன்முன்னோடி
யோசையினாற்சகுனவுண்மையறிந்தானொருவன் (௭௪)
வந்தெதிரேபோத்துவலம்பாயக்கண்டதனால்
முந்தவிந்தவேட்டைமுழுவேட்டையாய்க்கிடைக்கும் (௭௫)
குக்கில்வனப்பேட்டைக்குரலெழுப்பிகூட்டியதாற்
கைக்குள்வசமாகவின்றோர்கன்னிமணங்கூடுமென்றான் (௭௬)
அவ்வார்த்தைசொல்லமகாராஜனும்சூளேந்த்ரன்
மைவாய்த்தபன்றிமலைச்சாரல்வந்தணுகி (௭௭)
நாவிடமுங்கானவனைநாடிவலைகட்டவிட்டு
கோலியகப்பட்டாப்பிற்குழறகாரனரகிறுத்தி (௭௮)
எறும்பரிவிட்டிறங்கிப்படைக்கவிப்பு
மீறுந்தொனிமுரசுமேகங்கள்போன்முழங்க (௭௯)

வேலாளும்வில்லாளும் வெல்லுமெறியிட்டிக்
காலாளுமாய்பரந்து காடடைக்கலைத்துவிட்டார். (௮௰)
பன்றிமுயல்காடி பாய்புலிபுல்வாய்கடமா
ஒன்றோடொன்றுதட்டுண் டுலைந்துகலைந்தோட (௮௧)
எயவாருவேலா லெறிவாருமொனறையொன்றை
வைவாருஞ்சுற்றி மறிப்பாருமாய்நெருங்க (௮௨)
கட்டாப்பில்வந்த கடமாவைப்பின்வாங்க
ஒட்டாமற்குத்தி யொளியிருந்தபேரிழுக்க (௮௩)
சுட்டபுகைவழியே தூக்கவரும்பன்றியுடல்
சட்டுருவியோடத் தகட்டலையில்வேல்பாய் (௮௪)
வாலடித்துமேல்பதுங்கி வாய்பிளக்கவாய்கிழிக்க
வேல்பிடித்துவீரர்குத்த வீழ்புலிக்குமேல்துடிக்க (௮௫)
வலையில்விழுகாடிமுயல் மரையின்மிசைஞமலிவிழ
அலகினமிசைபிடரின்மிசை யடிகள்விழவுடல்பதற (௮௬)
செவ்வியோன்வேசிகையிற் சிக்கியுழல்வதுபோற்
கல்வியநாய்க்காலிற் கவரிமான்வீழ்ந்துழல் (௮௭)
கூடுமயிற்கூட்டங் கொடுக்கின்றதாதாவைப்
பாடும்புலவோர்கவி போற்பறந்தோட (௮௮)
வட்டமுலைமின்னார் மபக்கறுத்தயோகியைப்போற்
கட்டுவலையறுத்தோர் கான்வேதிபோனதுவே (௮௯)
கொட்டமிடும்புலியைக் குண்டுதுன்றுஞ்சுழலால்
சுட்டதொளிவெற்பைத் தொடர்ந்துசிலையோட (௯௰)
எமமானிடப்புலியு மிந்துமுயலும்மானும
கைமமானுஞ்சற்றே கலங்கிமனந்தேற (௯௧)
இவ்வண்ணமைய னியல்வேட்டையாடவொரு
செவ்வண்ணமான்வலையிற் சிக்காமலேகுதித்து (௯௨)
பற்றிவரும்பேர்க்கும் பதிகுழற்குமெட்டாமல்
உற்றகவிவாணாக்கண டோடுமுலுகதனைப்போல் (௯௩)
போங்கடுமைகண்டு புகழ்பெரியநாகேந்திரன்
வாங்குசிலையும் வடிக்கணையுமாய்விரைந்து (௯௪)
மானோடபற்றியென்றி வநதரகுராமனைப்போல்
தானோடப்பின்னோடித் தாவிகுதிகுதித்து (௯௫)
பாரிலிறகில்லாத பட்சிபோற்செல்லநெடுந்
தூரந்தொடர்ந்து தொடுங்கணைக்குபூசையிட்டான் (௯௬)

வேலாளும்வில்லாளும் வெல்லுமெறியீட்டிக்
காலாளுமாய்பரந்து காடடைக்கலைத்துவிட்டார். (அய)

பன்றிமுயல்காடி பாய்புலிபுல்வாய்கடமா
ஒன்றொன்றுதட்டுண் டுலைந்துகலைந்தோட (அக)

எயவாருவேலா லெறிவாருமொனறையொன்றை
வைவாருஞ்சுறறி மறிப்பாருமாய்நெருங்க (அ உ)

சட்டாப்பிலவந்த கடமாவைப்பின்வாங்க
ஒட்டாமற்குத்தி யொளியிருந்தபேரிழுக்க (அ ங)

சுட்டபுகைவழியே தூக்கவரும்பன்றியுடல்
சட்டுருவியோடத் தகட்டலையில்வேல்பாய் (அ ச)

வாலடித்துமேல்பதுங்கி வாய்பிளக்கவாய்கிழிக்க
வேல்பிடித்துவீரர்குத்த விழ்புலிக்குமேல்துடிக்க (அ ரு)

வலையில்விழ்காரடிமுயல் மரையின்மிசைஞமலிவிழ
அலகின்மிசைபிடரின்மிசை யடிகள்விழவுடல்பதற (அ சு)

செவ்வியோன்வேசிகையிற் சிக்கியுழல்வதுபோற்
கல்வியநாய்க்காலிற் கவரிமான்விழ்ந்துழல் (அ எ)

கூடுமயிற்கூட்டங் கொடுக்கின்றதாதாவைப்
பாடும்புலவோர்கவி போற்பறந்தோட (அ அ)

வட்டமுலைமின்னார் மபக்கறுத்தயோகியைப்பேர்ற்
சட்டுவலையறுசதோர் கான்வேதிபோனதுவே (அ கூ)

கொட்டமிடும்புலியைக் குண்டுதுன்றுங்குழலால்
சுட்டதொளிவெற்பைத் தொடர்ந்துசிலையோட (கூ ய)

எமமானிடப்புலியு மிந்துமுயலும்மானும
கைமமானுஞசற்றே கலங்கிமனங்தேற (கூ க)

இவ்வண்ணமைய னியல்வேட்டையாடவொரு
செவ்வண்ணமான்வலையிற் சிக்காமலேகுதிகது (கூ உ)

பற்றிவரும்பேர்க்கும் பதிகுழற்குமெட்டாமல்
உற்றகவிவாணைக்கண டோடுமுலுததைப்போல் (கூ ங)

போங்கடுமைகண்டு புகழ்பெரியநாகேந்த்ரன்
வாங்குசிலையும் வடிக்கணையுமாய்விரைந்து (கூ ச)

மானோடபற்றியென்றி வாகாசுராமனைப்போல்
மானோடபின்னோடித் தாவிக்குதிகுதித்து (கூ ரு)

பாரிவிறகில்லாத பட்சிபோற்செல்லநெடுந்
தூரந்தொடர்ந்து தொடுங்கணைக்குபூசையிட்டான் (கூ சு)

மால்தொடர்ந்தமானோர் மயிலைப்பிரித்ததையன்
கால்தொடர்ந்தமானோர் கருங்குயிலைக்கூட்டியதே (௧௭)
சிங்கத்தின்குட்டி சிலையேந்திச்செல்வதுபோல்
அங்கொருபூங்காவில் விடாயாறத்தனிப்புகுந்தான் (௧௮)
துன்றுவடஞ்சுனைநீர் தோய்ந்துமலர்தாவளைந்து
தென்றல்வநதேனையன் திருமுகத்தின்வேர்வகற்ற (௧௯)
கற்பகக்காவிந்திரனைக் கண்டுமலர்சிந்துதல்போற்
பொற்புடையோன்மெய்குளிரப் பூங்கானம்பூச்சொரிய (௨௰)
சந்தனத்தின்மீதிருந்து சஞ்சரிக்கும்பைங்கிளிகள்
சிந்தமன்சேய்க்கின்பம்வரச் சிந்துகவிபாட (௨௰௧)
இக்கிருக்கும்வேளைநல்ல வேகாந்தவேளையென
மங்கைநல்லாள் தூதுவிட்ட வண்டுபோல்வண்டினைய (௨௰௨)
மையல்கொண்டமன்னனுக்கு மாலையிடவந்துநின்ற
தையலார்போலச் சரக்கொன்றைக்கொம்பிலங்க (௨௰௩)
நங்கோன்துரைபெரிய நாகேந்த்ரனவ்வனத்தில்
சிங்காரம்பார்த்துலவிச் சிந்தைமகிழ்போதில் (௨௰௪)
சாதியொருநான்கின்முதற் சாதிபதுமினியா
மாதுநவரத்தின மாலையெனும்பெண்பெருமாள் (௨௰௫)
மதனகலைவாணி மதனசுரதாணி
மதனரதிக்கேணி மதனசுபகல்யாணி (௨௰௬)
காமக்குருபீடங் காமக்கொலுக்கூடங்
காமகிரீடமின்பக் காமக்கடலோடம் (௨௰௭)
மாமுனிவர்வேதவங்க மாமுனிவரத்தரங்க
மாமுனிவருதுசங்க மாமுனிவர்பிராணலிங்கம் (௨௰௮)
தெய்வரதிதேவி தெய்வகுணவாவி
தெய்வச்செழுங்காவி தெய்வமலைச்சஞ்சீவி (௨௰௯)
கம்மியன்கையாலடித்துக் காச்சிவெட்டித்திராமல்
செம்மலரோன்கைமலராற் செய்துவிட்டபொற்பாவை (௩௰)
வாய்பேசாவண்ண மதிலொட்டியில்லாமல்
தாய்பேசப்பேசியின்பந்துலவுரூபசித்திரம் (௩௰௧)
கையாற்பிடித்தொருவர் கட்டவிதழ்கன்றாமல்
மையார்குழலார் மடியிருக்கும்பூமாலை (௩௰௨)
காற்றிலடிப்பட்டலைந்து கண்முத்தரும்பாமல்
போற்றிமடவார் வளர்த்தெடுத்தபூங்கரும்பு (௩௰௩)

மொய்க்குமணக்குன்றி முகங்கருகிவாடாமல்
மொய்க்குணமென்நாளும வீசுமருக்கொழுந்து (௱௰௪)
பொங்கிச்சிவந்து கழுக்துப்புழுங்காமல்
தங்கநிறமாகச் சமைந்தமணப்பாகு (௱௰௫)
ஒக்குமலைக்காட்டி னுள்ளிருந்து தூங்காமல்
தூங்குசம்பரமஞ்சமிசை தூங்குநவரசத்தேன் (௱௰௬)
மொய்த்தமலைக்காட்டு முள்ளுடலையாமல்
மெத்தையின்மேலேறி விளையாடுந்தோகைமயில் (௱௰௭)
கொம்புதோறும்போய்த்தாவிக் கூவித்திரியாமல்
அம்பொன்மணியூச லிருந்தாடுங்குயிற்பேடு (௱௰௮)
கொஞ்சிமொழிகுழறிக் கூட்டிற்கிடவாமல்
செஞ்சொன்மதனகலை செப்புங்கிளிப்பேடு (௱௰௯)
கன்னியர்க்குத்தன்னடையைக் கற்பித்தபேடையன்னந்
தன்னைநடைபயிற்றுஞ் சாதியனப்பேடு (௱௨௰)
தேய்ந்துபோகிக்கச் சேர்ந்தகுணம்போகாமல்
தோய்ந்துபோகிக்கத் துலங்குகின்றசாதிமுத்து (௱௨௧)
ஒப்பமிட்டசெப்பி லொளித்துக்கிடவாமல்
செப்பமிட்டசெப்பிரண்டுந் தாங்கிவருஞ்சிவரத்னம் (௱௨௨)
நீறுனகாம னிமலனார் மீதில்வைத்த
மாறுமனவயிர மாற்றவருமாவயிரம் (௱௨௩)
கண்ணுக்குட் கண்மணிபோற் கண்மணிக்குப்பாவையைப்போற்
பெண்ணுக்குப்பெண்ணாசை கொள்ளவந்தபெண்ணரசு (௱௨௪)
அன்றுகுணமாலையெனு புன்பானபாக்கியைப்பார்த்
தின்றெனதுகண்ணி லிடக்கண் துடிக்குதென்றாள் (௱௨௫)
தோளினிடப்பால் துடிக்குதெனவுரைத்த
வாளினேடுவெட்டிப் படிக்கவரிவிழியாய் (௱௨௬)
கன்னியழியாத காரிகையேயின்றுனக்குச்
சொன்னேனதிகசுப சோபனமுண்டாகுதென்றாள் (௱௨௭)
பாக்கியுரைகேட்டுமற்றைப் பாங்கிமார்தம்முடனே
பூங்குழலாள்காவின்மலர் பூவெடுக்கவேண்டுமென்று (௱௨௮)
பச்சைப்பரிமளங்கள் பாங்காய்க்கலந்தரைத்த
கொச்சிமஞ்சட்பூசிக் குளித்ததிருமேனியின்மேல் (௱௨௯)
சாந்துபுனுகு சவாதுகதம்பம்பூசிக்
காந்திரவெண்சலவை கண்டையிட்டசேலைகட்டி (௱௩௰)

காவிவரிநெடுங்கட் காரிகைக்குப்பாங்கியர்கள்
சிவிவகுப்பெடுத்துச் சேர்த்துக்குழன்முடித்து (௱௩௧)
மையெழுதப்பொட்டெழுதி வட்டமிட்டபூண்முலைக்குத்
தொய்யிலெழுதித் துணையடிக்குப்பஞ்செழுதி (௱௩௨)
ஆடகப்பொன்மெட்டிட் டமுகுவெள்ளித்தண்டையிட்டுப்
பாடகங்களிட்டுப் பசும்பொற்சதங்கையிட்டு (௱௩௩)
முத்தாரமேகலைமேன் மூன்றடுக்குப்பொன்னரைஞாண்
வைத்தாரக்கட்டிமருங்கொடியாணமிட்டு (௱௩௪)
செய்யகொடிபவளஞ் செம்மணிகளீன்றதுபோய்
கைவிரலுக்கேற்றரதனக் கல்மோதிரங்களிட்டார் (௱௩௫)
கட்டிப்பவளங் கனகவளைபொற்கடகந்
தட்டுச்சரியைச் சரியாகக்கைக்கணிந்து (௱௩௬)
பட்டரங்கையிட்டுப் பட்டையப்பொற்காறையிட்டு
வட்டமுலைமார்பிலங்க வச்ரச்சவளியிட்டார் (௱௩௭)
மோகனப்பொன்மாலையிட்டு முத்துமணிமாலையிட்டுப்
பூகத்தைவச்ரமணிப் பூஷணங்களால்மறைத்தார் (௱௩௮)
வாய்க்குமொருவட்ட மதியொருமுந்தீன்றதுபோல்
மூக்குத்திமுகது முகத்துக்கிணங்கவிட்டார் (௱௩௯)
கொந்தளப்பொன்னோலையிட்டுக் கொப்பிட்டுவாளியிட்டுச்
செந்திருவிற்கேற்கத் திருவும்பிறையுமிட்டு (௱௪௰)
கொண்டைச்சுருட்டிமுத்துக் குச்சிட்டுக்குப்பியிட்டுத்
துண்டப்பிறைக்கணங்கச் சுட்டியொன்றுகட்டிவிட்டார் (௱௪௧)
பூட்டினார்பொற்சிலைக்குப் பொன்னிடுவார் போலுடைமை
சூட்டினார்பூமாலை சுற்றினார்தோழியர்கள் (௱௪௨)
ஞாலம்புகழு நவரத்னமாலைமின்னாள்
கோலஞ்சிறந்தமலர் கொய்யவென்றுதானடந்தாள் (௱௪௩)
வங்காரமாலைமுத்து மாலைகுணமாலை
சிங்காரமாலை திகழ்மோகனமாலை (௱௪௪)
சம்போகவல்லி சரசவல்லிகாமவல்லி
அம்போருக்ககன்ன மிர்தவல்லிநீலவல்லி (௱௪௫)
மோகரத்னமா துரத்னமுத்துவசங்கரத்ன
நாமரத்னமென்னுமந்த நல்லவுயிர்ப்பாங்கியரும் (௱௪௬)
தானுமாயந்தமலர் சண்பகம்பூங்காவனத்தின்
மானினங்கள்சூழ வரும்பிடிபோல்வந்தணுகி (௱௪௭)

கொய்யுமலர்வண்டெழுந்து கோகனகப்பூவெனச்செங்
கைம்மலனாச்சுற்றங்கடிக்மலர்ப்பூவெடுத்தாள் (௱௪௮)
பூங்கொடிபோனின்றுலவிப்பொன்னனையாள்பூவெடுத்தப்
பாங்கிமாரெல்லாம் பாக்கோடிப்பூவெடுத்தார் (௱௪௯)
வானையொத்தசொங்கருங்கண மாமனூர்மதராசன்
பானையத்தைக்கொள்ளையிடும் பண்பாய்மலர்பறித்தார் (௱௫௰)
அங்குநின்றபெண்களெல்லாமங்கங்கேபோய்மறைய
இங்குநின்றபேதை யினமபிரிந்தமான்போல (௱௫௧)
மெல்லத்தனிநடந்து வெட்சியிருவாட்சி
மல்லிகைசெவ்வந்தி மலர்நதபிச்சிப்பூவெடுத்து (௱௫௨)
கோட்டுப்பூமுல்லைமுதற் றூயகொடிப்பூவெடுத்துக்
கோட்டுப்பூமிதிலங்கக் கொமபனையாள்மாலானுள் (௱௫௩)
காவியிரண்டிருக்க கஞ்சன்மலரஞ்சிக்க
பூவினிறங்குன்றுப் புன்முருக்கம்பூவிருக்க (௱௫௪)
கோங்கரும்பிரண்டிருக்கக்கோவைபிட்டமுல்லைமுகைப்
பூங்குமுதத்துள்ளிருக்கப் பூஞ்சண்பகமிருக்கப் (௱௫௫)
பூகலத்திலேதான் பொதிகைத்திரப்பவர்போல்
மாதரசிபூத்த மரந்தோறுஞ்சென்றுசென்று (௱௫௬)
சாதினருஞ்சணபகமேகாதுவபூந்தாதகியே
கோதிக்குழல்முடிக்கக்கோலமலர்தாரீரோ (௱௫௭)
மந்தாரையேசெருந்தி மாமரமேநீரொனது
சந்தாபந்தீரத் தரிக்கமலர்தாரீரோ (௱௫௮)
பாதிரியேகர்விற்பனிநீர்ப்பருமரமே
மாதவியேநீரெனக்குவண்ணமலர்தாரீரோ (௱௫௯)
விண்ணூர்ந்தபுன்னை விருட்சமேகுங்குமமே
அண்ணுந்துநிற்குமென கானமலர்தாரீரோ (௱௬௰)
அம்பிட்டகண்ணா கன்றுவிட்டாருங்களைநான்
கும்பிட்டேன்கோகிலங்காள் கொய்துமலர்தாரீரோ (௱௬௧)
என்றவுரைகேட்டெழிற்குயிலும்பூங்கிளியுங்
கன்றிமனநாணியந்தக்காவின்புறத்தொதுங்க (௱௬௨)
பூமரத்தினிழலிலோர் பூங்கொடிபோனின்றுலவித்
தாமனறுங்குழலி தானொருத்தியாகின்றுள் (௱௬௩)
ஏந்துமிளமுலைப்பெண்ணை காந்தமாயிருக்க
காந்தவீரன்பெரிய நாகமகூளேந்த்ரதுரை (௱௬௪)

பண்டுதனைவென்றபகைதீரக்காமனுக்குக்
கொண்டுசிவனைவெல்லககூரம்புதேடுதல்போல் (௱௬௫)
வண்டுலவும்போதுமலர்ந்தபெருஞ்சோலைவளங்
கண்டுலவும்போதிலெதிர்கண்டான்விழிகுளிர (௱௬௬)
நிராமின்னாளோநிசாநாகக்கன்னிகையோ
சூரா/மின்னாளோசுரலோகமேனகையே (௱௬௭)
கண்ணிமையுமண்ணிவிட்டாகாலுமனந்திகைத்த
வெண்ணமகற்றியதாலிவ்வுலகிற்பெண்ணரசே (௱௬௮)
என்றெடுத்துமின்னாளிருசெவிக்குமின்பமுறக்
குன்றெடுத்தபூங்காவிற்கோமானுரைக்கலுற்றான் (௱௬௯)
ஊரோதிருக்குமுலகேதுமதுதிரும்
பேரேதுவார்த்தையொன்றுபேசினலாகாதோ (௱௭௰)
ஐவிரலுக்குள்ளேயமர்ந்தசிவனார்க்குத்
தெய்வவடிவெடுத்தசேயிழையுநீதாமே (௱௭௧)
பங்தெழுப்புங்கையாற்பரனெரித்தமன்மதனை
வங்தெழுப்பிக்கொண்டமகராசிநீர்தாமோ (௱௭௨)
பண்டுநளரூபம்பலரொடுக்கவேளனைக்
கண்டுமணமாலையிட்டகாயக்கிநீதாமோ (௱௭௩)
தெய்வரம்பைமின்னார் திருவழகெலாந்திரட்டிக்
கைவருந்தவேதனுமைக் கற்பித்துவிட்டானோ (௱௭௪)
என்பட்டமென்றுவரு மிந்திரனார்பட்டமெலாந்
தன்பட்டமாக்குஞ் சமத்தியார்நீதாமோ (௱௭௫)
தெண்டிரையிலோடிமலைச் சென்றேறிவாய்வெருவிக்
கொண்டல்திரிவதுங்கள் கூந்தலுக்குத்தோற்றலமோ (௱௭௬)
தேய்ந்தபிறையுங்கள் திருநுதலென்றுலகிலே
ஆய்ந்தமணிச்சுட்டி யணிந்திருக்கக்காணேனே (௱௭௭)
பூமன்வளைத்த புருவத்துக்கந்தாதி
காமன்வளைத்த கரும்புருவமொப்பாமோ (௱௭௮)
அவ்வேடங்கொண்ட வருங்கயல்போல்வேதனினி
எவ்வேதங்காணப் படைத்தானிருவிழியை (௱௭௯)
சன்னதவேள்திர்த்திப்ர தாபப்புரிந்தகொலை
வன்னமெனமூன்று மிருப்பதுங்கள்வாள்விழியே (௱௮௰)
வல்லையப்போருக்கொதுங்கேன் வாள்வேல்படைக்கொதுங்கேன்
மெல்லிநல்லீருங்கள் விழியம்புக்கச்சமுற்றேன் (௱௮௧)

தூக்குமூக்குத்திமுத்துத்தூங்காக்குமிழையுங்கள்
மூக்குக்குவமைசொன்னால்மூக்கமிழோர்க்கொவ்வாதே (௱௮௨)
மாங்கனிபோலவென்றும்வள்ளைக்காதெங்குமென்றும்
பாங்கிலுமைக்கண்டேன்பல்வரிசைக்கென்சொல்வேன் (௱௮௩)
வித்துமருந்துன்னையுங்கள்மெல்லிதழென்றுலிதிலே
முத்தங்கிடைக்குமதில்முத்தங்கிடையாதே (௱௮௪)
இபமானமென்முலையிரிந்துமுகத்துக்கோர்
இபமானஞ்சொல்லவொருபொருளுங்காணேனே (௱௮௫)
சங்கழுத்துமுங்கள்தனிக்கழுத்தென்றுலுதிராய்
அங்கழுத்துமரேகையதிற்பரியமாட்டாதே (௱௮௬)
தோளுக்குமூங்கிலிணைசொன்னாற்பெருஞ்சோதி
நாளுக்குமின்மினியைநாவலருஞ்சொல்லாரோ (௱௮௭)
காந்தளவனஞ்சென்றதுங்கள்கைபோலுந்தானிருக்க
வாய்ந்ததவஞ்செய்துவரம்பெறவேமென்றலவோ (௱௮௮)
தப்புநவைமீட்டியிசைதத்திதனிலேற்றறியாச்
செம்பவளமுங்கள்சிறுவிரலுக்கொப்பாமோ (௱௮௯)
வார்த்தைக்குத்தோற்றவனக்கிளியின்மூக்குமுனை
சேர்த்தநகமென்றுவமைசெப்பினுமொப்பாமோ (௱௯௰)
பாவினிபல்கண்டுபல பாடித்தெரிந்துபெருங்
காவினத்தைப்பாடிக் கருணாரங்கேற்றுதல்போல் (௱௯௧)
முந்தசெழுங்கமலத் துள்ளேமுளைத்தெழுந்தேன்
தந்திச்சிமிள்படைத்துத் தாளவட்டந்தான்படைத்து (௱௯௨)
வம்பைச்சமைத்து வடிவுகண்டுமால்யானைக்
கொம்பைச்சமைத்துக் குனஞ்சற்றதிலறிந்து (௱௯௩)
தேங்காயைச்செய்து திரட்சிகண்டுபொற்குடத்தைப்
பாங்காகச்செய்து பனைப்பதிலேகண்டறிந்து (௱௯௪)
விந்தைகருமேருமுதல் வெற்பெல்லாஞ்செய்தவன்கை
வந்ததற்பினுங்கள் வனமுலையைச்செய்தானே (௱௯௫)
காமனிமைபாமல்வைத்த கண்கருப்புபாய்ந்ததுவோ
வாமமுலைக்கண்கண் மணிகருப்பையெனசொல்வேன் (௱௯௬)
சூரியனுமிந்திரனுந் தம்பி முகத்தோனுமுங்கள்
பாரமுலையின் பகையடக்கவோபிறந்தார் (௱௯௭)
ஆலோவயிறுதனி லாலிலைமேற்பள்ளிகொள்ளு
மாலோவுரோம வகுப்பழகையென்சொல்வேன் (௱௯௮)

வந்திச்சுழியை வலமாகச்சுற்றிலுநீ
ருந்திச்சுழிகளுங்க ளுந்திசுழியாமோ (௱௯௯)
மெல்லிநல்லீருங்களிடைமின்கொடிபோலுண்டெனவு
மில்லையெனவும்படைக்கவிரண்டுபிரமனுண்டோ (௨௱)
வாதமுதற்சாதிவடிவினல்லல்குலுஞ்செந்
தாமரைப்பூப்போலிருக்குஞ்சந்தேகமேவேறுமுண்டோ (௨௱௧)
வாழைக்குறங்கல்குல்மண்டபமாமன்மதனுக்
கேழைக்கிரங்கு மிடமென்றறியேநான் (௨௱௨)
செவ்வரால்கவ்விநின்ற சிரலவனேமுழங்கால்
அவ்வராலைச்சுமந்தவாமையோடென்னடிகாள் (௨௱௩)
அஞ்சுதலைபறவோவஞ்சுவிரனும்படமோ
மஞ்சுவரக்கண்ட மடமயிலோவுன்சாயல் (௨௱௪)
பின்னழகைக்காணில்ரதிப்பெண்ணைமதனுடுவமோ
முன்னழகைக்காணின் முனிவர்தவஞ்செய்வாரோ (௨௱௫)
சேடியருமில்லாமற் றேன்மொழியீரிவ்வனத்தில்
நாடிவரப்பெற்றதுமுன்னுன்செய்தமாதவமோ (௨௱௬)
ஏதுமொருவார்த்தை யியம்புகிலீருங்களுநா
வேதமோகல்லாலின் மேவுசிவமந்திரமோ (௨௱௭)
மேருகிரிமங்க வெள்ளிமலையும்பார்க்க
நீருக்கரீசநெகிழவிடமாட்டீரோ (௨௱௮)
கையணைவைத்துங்கள் கழுத்தின்மணமோந்துகொண்டால்
ஐயமறச்சங்கமுக மரடும்பலனலவோ (௨௱௯)
புனைநற்றுகில்சற்றே புறம்போகச்செய்துவிட்டால்
அனந்தசயனதலத்தையானறிந்துக்கொள்ளேனே (௨௱௰)
தாகமறமுத்தமொன்று தந்தாலுமதுசக்ர
வாகமுலைககுமுத்தமாலையாச்சூட்டேனே (௨௱௰௧)
என்மார்பிலங்கநகரேகையைவைத்தாலுமது
பொன்மார்பிலங்காதந பூஷணமாய்ப்பூட்டேனே (௨௱௰௨)
பாதியுடலிற்பரமனொருபெண்ணைவைத்தான்
மாதொருத்திதன்னை மணிவண்ணன்மார்பில்வைத்தான் (௨௱௰௩)
செங்கமலவேதனே தேன்மொழியைநாவில்வைத்தான்
உங்களைநானென்மனதுக்குள்ளிருத்திக்கொள்ளேனே (௨௱௰௪)
வாமத்தரவுமுலை மந்தரமுந்தந்தானென்
காமக்கடலைக் கடந்தமிர்தங்காட்டேனே (௨௱௰௫)

பட்டாடைக்காமன் குளத்தையென்றபாரிசமா
விட்டால்முப்போக விலைவெற்றிக்கொள்வேனே (உ௰௬)
வாழைபடிமுக்காணிவட்டமெனக்களித்தால்
ஏழையுழுதுபயி ரேற்றிப்பிழையேனே (உ௰௭)
வற்றாச்சமுத்திரமா மாரனரண்மனைக்குள்
அஸ்தாந்திரமெழுதி யாண்மைசெலுத்தேனே (உ௰௮)
ஆலடிச்செய்யோடரசடிவட்டம்விட்டால்முச்
சாலடித்துநல்வெள்ளைச் சம்பாவிளையேனே (உ௰௯)
தாண்டுமிருகத் தனிவேட்டைவந்தவெளை
மீண்டுமொருகாம வேட்டைவிளையாடவிட்டால் (உஉ௰)
கொங்கைமலைபற்றிக் குரலெழுப்பியேறிநடுப்
பொங்குகலைகுலையப் புல்லுமனையுள்ளாக்கி (உஉக)
சாய்ந்தவிழிமானிரண்டுஞ் சண்பகக்காட்டிற்குதித்துப்
பாய்ந்துகுமிழோடொதுங்கிநின்றுபரகவிக்க (உஉஉ)
மோகவலைக்குமுயர்ச்சிக்குமின்பமுற
வாகமலைப்பன்றியடுத்தொருகைபாரேனே (உஉங)
மன்னிப்பாயென்னை வரவழைத்துநீருமது
சன்னிப்போராகக கலவிப்போர்க்கென்னைவிட்டால் (உஉச)
காமத்தேரேறிநின்றாக் கட்டியிருகக்கலந்து
தாமவேல்பாயச்சமரின்முனைக்காட்டி (உஉ௫)
முன்னணியும்பின்னணியு மெயத்தகுழல்வகுப்பும்
பின்னிடைநன்னூலிடைப்ர தாபக்கொடியாட (உஉ௬)
தண்டையொலிமேனந் தாளநெகிழ்ந்தகுழல்
வண்டுபுரங்கொடுத்த மாற்றலர்கள்போற்பறக்க (உஉ௭)
வெம்பியெனைப்பாய்ந்தடர விட்டதனபாரமெனும்
கம்பமதயானைக் கைப்பிடியாகப்பிடித்து (உஉ௮)
கங்கமுழங்கச் சரிபோகப்போர்முடித்து
செங்கைக்கரும்புச் சிலமதனைவெல்லேனே (உஉ௯)
மேலுலகந்தன்னைவிட்டு மேதினியில்வந்தரம்பை
போலுமுங்கள்யௌவனமாம்பொய்கைதனிலென்னைவிட்டால் (உங௰)
ஆடையொருபக்க மனையிற்கிடக்கவிதழ்
மூடியிரண்டு முளரிகனென்மார்பழுந்த (உஙக)
ஓர்தாமரைப்பூவுகந் தென்முகத்தணைய
ஓர்தாமரைப்பூ வுலாவிமுகைத்தடவ (உஙஉ)

பின்னொருசெந்தாமரைப்பூப் பின்பிடரியூடுவரக்
கன்னிவராரமோடு கலந்திடுப்பினூடொதுங்க (௨௩௩)
என்மீதுகாவி யிருகெண்டைபோராட
மென்யாமலர்க்குமுத மெல்லமெல்லத்தேனூற (௨௩௪)
சைவலமோற்பாற்குலையச் சங்கொலிப்பவீழ்ந்தெனது
மெய்குளிரத்தோய்ந்து விரகவிடாய்தீரேனோ (௨௩௫)
தங்கவிளையாட்டுத் தனிப்பீடமீதுசது
ரங்கவிளையாட்டுகே கழைத்தீரோயாமாகில் (௨௩௬)
கால்பலன்கொண்டேறறியிரு காரானைமுட்டவிட்டு
நாலுமுகத்து நடத்துபரிசுற்றவிட்டு (௨௩௭)
எட்டெட்டினுக்கு மிணக்கச்சகடேற்றித்
தொட்டதொட்டவாட்டமெலாந் தோலாமல்வெல்லேனோ (௨௩௮)
காதோடுவாதாடுங் கண்மடவீரொன்றியிலே
சூதாடவென்னைவரச் சொல்லியழைத்தீராகில் (௨௩௯)
குங்குமக்காச்சோடிரண்டுங் கூட்டிக்கலந்தாடி
அங்கம்பசலைக்கா யத்தனையும்போகவிட்டு (௨௪௰)
விந்தைதருஞ்சிவப்பை மெல்லவரசிறுத்தி
அந்தக்கறுப்பையெல்லாம் பின்னேயலையவிடடு (௨௪௧)
ஒருக்காலிருக்காலோ டொப்பாறுமாறும்
பெருககாகலக்கம் பிசகாமலேயாடி (௩௪௧)
கண்பார்த்துநீங்கள்வெட்டிக் கட்டுக்தொடர்ந்தேறிப்
பாண்பாகவிட்டிற் படுத்துவிளையாடேனோ (௨௪௩)
நற்காமபூசை நடததிடவேநீங்கள்சொன்னால்
விற்காமதெய்வ விரதந்தனிலிருந்து (௨௪௪)
மோகசமுத்திரத்தின் மூழ்கிமதன்மந்திரமும்
ஆகவுருவேற்றி யந்தக்கரணமுடன் (௨௪௫)
கன்னலொடுதேமாங் கனியருந்திச்செவ்விளநீர்
தன்னைப்பருகிகித்தினை சத்துருவைத்தானகற்றி (௨௪௬)
சாமஞ்சாமந்தோறுஞ் சங்கநாதத்துடனே
நேமமொடுபூசை நிறைவேற்றிகொள்ளேனோ (௨௪௭)
இன்னேரமென்சொற் கிரங்குவீரொப்படியும
மின்னேயுமைக்கலந்து மேவாமற்போவேனோ (௨௪௮)
ஓலைகட்டி யொதுககாமலேயெளிதில்
நாடியபொன்மானை நான்விட்டகல்வேனோ (௨௪௯)
தாப்பானைகாடுந தடவரையுஞ்சுற்றாமல்
வாய்ப்பாகவந்த மயிலைவிட்டுப்போவேனோ (௨௫௰)

விண்டுநெறுந்தேன்சொரியு மென்கமலப்போதுகண்ட
வண்டுபடிந்துண்டு மகிழாமற்போவதுண்டோ (௨௫௧)
காந்தர்வநியாயமெனக்கண்டவுடனேயிணங்கித்
தோய்ந்திடுங்கல்யாணமாக சோபனகலியாணமன்றோ (௨௫௨)
கானுருமவள்ளிதனைக் கந்தனூர்கூடியதும்
மானுள்சுபத்திரையை வாள்விஜயன்கூடியதும் (௨௫௩)
தாங்களேசம்மதித்தோ தந்தைதாய்சம்மதித்தோ
மாங்குயிலேயென்னை மருவுவதேகாரியங்காண் (௨௫௪)
முலைக்கோட்டையுள்ளமுத்து மோகனமேயென்னை
நிலைக்கோட்டைவேந்தனென்று நீர்தாமறியீரோ (௨௫௫)
நானுநவபுரியா னூரியர்சிகாமணிநீ
தானுநவரத்நமாலையென்றூற்றூழ்வாமோ (௨௫௬)
என்றுபெருஞ்சூம்கொண் டிராகுமழைக்கெதிரே
சென்றுவருண செபஞ்செபவதுபோல் (௨௫௭)
தன்னிடத்தில்வைத்தமையல் தாங்காதாட்கிச்சைசொல்லி
வன்னவளைச்செங்கை தொடலுமயிர்சகுச்செறிந்தாள் (௨௫௮)
போகனெனுமபெஞ்சைப் பெரியநாகேந்த்ரதுரை
நாகரிதமோக நவரத்நமாலையுடன் (௨௫௯)
கொங்கலருமுல்லைக் கொடியநருமல்லிகையும்
பைங்கொடிமாவைப் படர்ந்தமணிமண்டபத்தில் (௨௬௰)
பூத்துச்சொரிந்தமலர்ப் பூம்பாயலின்மீது
சித்ரதியுமந்தமன்மதனும்போலிருந்து (௨௬௧)
வாய்பிளவருந்திச்செங்கைச்சுருள்பகிர்ந்து
கோவையிதழ்முத்தமிட்டுக்கொய்யுமலர்ப்பூமுடித்து (௨௬௨)
கட்டியணைத்துக்கனிவாயிதழ்பருகி
வட்டமுலைபிடித்துவண்ணத்துகில்நெகிழ்த்தி (௨௬௩)
ஆலிங்கனவிதங்களெந்துபுரிந்தரவம்
போலுங்கடித்டமாம்பூவைக்கனியாக்கி (௨௬௪)
பொறகொம்பும்பூங்கொடியும்பூண்டுதுவண்டாதெல்போல்
கற்குநவசித்திரகரணவகைபாராட்டி (௨௬௫)
குங்குமகதம்பமிடுகொங்கையினகம்பதிய
மங்குலினிருண்டகுழன்மஞ்சரிகள்பிஞ்சரிய (௨௬௬)
வைக்குமுகபதமமுகவட்டமதியிற்பதிய
நெக்குருகிநெக்குருகிநெறறிகளின்முத்துதிர (௨௬௭)
பாகனையவாய்மொழிகள்பாதிதடுமாறவொரு
பூகமிசைகாடைகள்புறுவொலிகள்குகுகுவென (௨௬௮)

வரிவழிகள்கடைபுரளமதுரவிதழ்வெளிறவிரு
பரிபுரமும்வளையுமிடைபதனமிடைபதனமென (உகூகூ)
ஆவியொன்றுகூடிரண்டுளசையொன்றுநேசமொன்று
மேவுசம்ப்ரதாயமொன்றுவேளையிந்த்ரபோகம்வந்து (உஎ௰)
அந்தவநுபோகபுரமானந்தசம்போகம்
தக்கசுகபோசஞ்சரிப்போகதாய்ப்பெருக (உஎக)
சோபவிடாய்தீர்த்துச்சுனைநீரளைந்துபிர
தாபவிடாயாறியிருக்குந்தருணத்தில் (உஎஉ)
நவ்வியடிபற்றி நடந்தகிளங்கமல்லன்
செவ்வியடிபற்றிச் சேனைகளந்தொடர்ந்து (உஎஙு)
தென்னனடிபரவத் தேடிவருமேழ்கடல்போல்
மன்னனிருக்கு மலர்க்காவில்வந்தணுகி (உஎச)
கண்ணாரக்காணுமுன்னங் காதாரச்சொற்கேட்டு
நண்ணார்புகழ்பெரிய நாகமகூளேந்த்ரதுரை (உஎரு)
மின்னைநிறுத்திவரு மேகம்போன்மோகமின்னாள்
தன்னைநிறுத்திவந்து தானெக்கெதிரானான் (உஎசா)
கானிலிருந்தையன்வரக் கண்டோர்முகங்களெல்லாம்
பானுவரக்கண்ட பயம்போலவாயினவே (உஎஎ)
கொண்டல்படிக்குங் கொடைப்பெரியநாகேந்த்ரன்
தண்டிகையிலேறியந்தச் சண்பகப்பூங்காவகன்றான் (உஎஅ)
மந்திரிதளகர்த்தர்வர மாசேனைமுன்னடக்க
மந்திரிதுரைமக்களுடன் சந்தையூர்க்கேமுகமாப் (உஎகூ)
வந்துநவபுரியில் வாழுமகோபிலமால்
செந்திருவின்பாதமலர் சேவித்துதெண்டனிட்டு (உஅ௰)
தீர்த்தமுடன்மாலை திருவடிபெற்றுண்மகிழ்ந்து
வார்த்தைதவராதகண்டன் மால்யானைமீதேறி (உஅக)
தாளநவுரி தவண்டைதுடிநாகசுரம்
பேரிகையெக்காளம் பெரியமேளந்தொனிக்க (உஅஉ)
கஞ்சுகியர்கைபபிரம்பர் கட்டியர்முன்கைநீட்டி
பெஞ்சைநகர்வேந்தர் ப்ரதானிகளங்கமல்லா (உஅஙு)
துங்காசுவாமி துரைராசகண்டசய
ரங்காரணவீம ராயவுத்ரமிண்ட (உஅச)
தீரசுத்தவீரசுப்ர தீபகர்த்தாநாவலர்க்கு
காரசத்ருசேதநர்பர தாபவச்ரதேகவுகரா (உஅரு)
மகதரங்கர்கவுடர்வங்கர் லடகர்லிங்ககுடகர்கொங்கர்
குகுதர்வந்துபணியுமிந்த்ர கொலுவிருந்தபுவனசந்த்ரா (உஅசா)

சாமிபராக் கெச்சரிக்கையெனக்
கோமேதயம்போற் றுளங்குகுடைநிழற்ற (உஅஎ)
பக்கக்கவரிரட்டைப் பாவாடைவீசிவர
மைக்கட்குமரியர்க ளாலாத்திவந்தேந்த (உஅஅ)
மாலைசரிய வருவார்சிலமடவார்
சேலைசரிய வருவார்சிலமடவார் (உஅகூ)
கண்ணுலவும்பைந்தார் தருவானெனவோடி
வண்ணவளை தோற்று வருவார்சிலமடவார் (உகூ௰)
தேடுபுகழ்வேந்தனுடன் செலலுமனதைப்பிடிக்க
ஓடுதல்போலோடியடி போய்வார்சிலமடவார் (உகூக)
வல்லியனையாள்பதிசத வாய்வடுவைக்கண்டுதங்கள்
வெல்லிதழிற்பதித்து மீள்வார்சிலமடவார் (உகூஉ)
ஒருமானைப்பற்றிவிரைந் தோடியவாள்வேந்தன்
வருமானனேகமெதிர்வந்துநிற்கப்பாராமல் (உகூங)
வாழிசருவசித்தி வாரணத்திற்றனிரங்கி
ஆழியனையான்பொன் னரன்மனைக்குள்வந்திருந்தான் (உகூச)
இங்கேதுரைப்பெரிய நாகேந்த்ரன்வீற்றிருக்க
அங்கேமலர்க்காவி லன்னநடைப்பெண்பெருமாள் (உகூரு)
பேராளன்பெஞ்சைப் பெரியநாகேந்த்ரதுரை
வாராமைகண்டு மதிமறந்துமெய்சோர்ந்தாள் (உகூசா)
ஆனைதனைக்காணா தருமபிடி போய்ப்பார்ப்பதுபோல்
மானனையாளந்தமலர் மண்டபமுநீர்ச்சுனையும் (உகூஎ)
தேடினாள்மூச்செறிந்தாள் செங்கமலத்தாள்சிவப்ப
ஓடினளெங்கோ னுநவெளியைக்கெண்டணிட்டாள் (உகூஅ)
என்னிடத்திற்கோப மேதென்றெழுந்திருந்தாள்
கன்னல்வளைத்தங்கொருவன் வந்தெடுப்பக்கண்டயர்ந்தாள் (உகூகூ)
காடுருவக்காமனெய்த கைப்பாணஞ்செப்புமுலை
யூடுருவவேலுருவியமான்போலுழன்றாள் (ங௱)
காலாயுதக்கொடியோன் கையசயுதவழியே
மாலாயுதமன்ற மாமணியைத்தானுதித்தாள் (ங௱க)
பொற்பகலாமாதவியே புன்னையேசன்பகமே
கற்பகமேயென்னாசைக் கற்பகத்தைக்காணீரோ (ங௱உ)
காவரசேயாயிரச்செங் கண்ணரசுபோலிருக்கும்
பூவரசேபெஞ்சைப் புவியரசைக்காணீரோ (ங௱ங)
முன்மான்பினைநடக்க மோகமாய்ப்பின்றொடரும்
பொரன்மானேயென்னாசைப பூமாலைக்காணீரோ (ங௱ச)

தோய்ந்தரவியைத் தொடர்ந்தழுககுரிய
காந்தமேயென்னுசைக் காந்தன்வரக்காணீரோ (௫௱௫)
என்னிடத்தில்மாலாகி யிச்சைசொல்லிச்சேர்ந்ததுரை
பின்னெனக்கோரந்தரங்கம் பேசாமற்போவானே (௫௱௬)
கானிடத்தினுலுலவக் கண்டுதனியாகவந்து
வானவர்கோனென்னை மனமுநகிச்சேர்ந்தானே (௫௱௭)
தந்திரிகொள்வீணை தனையொளித்துவந்துதெய்வ
கந்தருவனேயானுற் கண்ணிமைக்காக்காரியமென் (௫௱௮)
இந்திரனேயானுற்கண் ணீராஞ்ஞூறொன்பதுண்டே
கந்தருவனேயானும் கண்ணிமைக்காக்காரியமென் (௫௱௯)
பொய்யுங்குடையான்பெரியநாகேந்த்ரதுரை
ஐயனன்றிந்ததல்லாலேயமினிவேறுமுண்டோ (௫௱௰)
மன்மதனேவென்று வயங்குந்திருவழகை
என்மனதுகுள்ளே யெழுந்தவோவந்தகன்றான் (௫௱௰௧)
கூடியின்பங்கண்ட குதலைமொழிப்பேதைநம்மைத்
தேடிமுகம்வாடித் தியங்குவளென்றெண்ணுனே (௫௱௰௨)
இந்தக்கவடுசெய்வானென்றறிந்தாற்கைகலக்கும்
முந்தக்குடிலமிட்டுமுன்றுனைகொள்ளேனே (௫௧௩)
தன்னெஞ்சம்போலத்தழுவிப்பரிந்திருக்க
வன்னெஞ்சியென்றேமறக்கத்துணிந்தானே (௫௧௪)
பேரூர்வழியேநாம்பின்தொடர்வோமென்றாலும்
ஒருரொன்றுனிலேயேயொன்பதூரொன்றுனே (௫௧௫)
என்றிரங்கும்வேளையிருஞ்சாலேப்பிரிந்த
அன்றிலெனத்தானேசிறியாளறிவயர்ந்தாள் (௫௧௬)
இவ்விடத்தின்மெய்சோர்ந்திவள்கிடக்கவெவ்வேறாய்
அவ்விடத்திறபூவெடுததவாயிழையாரொல்லோரும் (௫௧௭)
குன்றீரண்டுதாங்குங்கொடிபோலிடைதுவள்
நின்றுமலர்பறிததசேரிழையைக்காணுமல் (௫௧௮)
மற்றோர்வனமேநாம்வந்ததெனத்திகைத்துக்
சிற்றடியைக்கண்டார்நிரண்டாரொடுமுகமாய் (௫௧௯)
சென்றூர்நெடுந்தூரந்தேன்மொழிதியதேன்மொழியே
என்றூர்மதிமறந்தவேகநிழையைவந்துகண்டார் (௫௨௰)
கையணையிற்சாய்ந்துகலேகுலையக்கண்முழிப்பப்
கையல்கிடநீபக்தரியாமற்பாங்கியர்கள் (௫௨௧)
தூக்கமோவெம்பசியேதோழியனக்காணுத
ஏக்கமோமன்மதன்கணேறுபட்டகாரணமோ (௫௨௨)

செய்வதுவறியே நாஞ்செய்வதென்றே திகைத்துக்
கையார்கருத்திக்கட டியெடுத்தணைந்தார் (௩௨௩)
மாங்களிரால்வீசிமதிமுகத்தில்வெயர்துடைக்க்
ஏந்திழைபாள்மூர்ச்சைதெளிந்தேங்கினள்போலிருந்தாள் (௩௨௪)
ஒண்டொடியார்மங்கையுடறிற்குறியிடங்கள்
கண்டிதுவேதென்றார்கள்கள்ளிக்கும்வாயுமுண்டோ (௩௨௫)
கைநடுங்கிக்கால்நடுங்கிக்கன்னியர்களெல்லோரும்
மெய்நடுங்கித்தானேவிசாரமிட்டுக்கொண்டுநின்றார் (௩௨௬)
வல்லமீனயகொங்கைமடமானைக்கலகலாகின்
மெல்லமெல்லத்தானடத்திவீட்டிற்கொண்டுபோனார் (௩௨௭)
பாகார்மொழியாளைப்பஞ்சணையிற்சேர்த்திடலும்
மோகவன்னமீறமுத்தம்பொரிக்கதுவே (௩௨௮)
முன்கையணிவளைகண்மூச்செறியக்காய்ந்துருகி
பைங்குவளைக்கண்ணீரினவெள்ளத்தாலாறியதே (௩௨௯)
வீசியவேம்பூமெழுகுபாவைக்குநளந்
கூசிகள்போர்பாயவுருககூசியுள்ளயர்ந்தாள் (௩௩௰)
கண்டுசகியார்கருத்திச்சகியாராம்
ஒண்டொடிக்குச்சீதவுபசாரஞ்செய்யலுற்றார் (௩௩௧)
செய்தவுபசாரமெல்லாந்தேனுள்பொருளாகி
வைதுமடவாளைமனங்கொதித்துச்சொல்லலுற்றாள் (௩௩௨)
வேடையெலாந்தீர்வெண்மேல்வீசுவார்போலவெயிற்
கோடையெலாமென்மீதிற்கொண்டுவந்துவிட்டீரோ (௩௩௩)
சாளரத்தைநீங்கித்தனிப்புலியைப்பாயவிட்டு
நீளுமெல்லத்தென்றலென்றீர்நிட்டூரஞ்செய்திட்டீரோ (௩௩௪)
காமரசமெல்லாங்கனகமஞ்சமேற்பரப்பிப்
பூமலரென்றீர்மடவீர்பொய்யும்படித்தீரோ (௩௩௫)
சேலென்றகோதனைத்தோன்றேமாலையைப்பிழிந்து
யாலென்றுகந்தீர்பழிக்காரனானீரோ (௩௩௬)
மங்கைநல்லீரொன்றன்னமுலைக்கிநீரணிந்த
குங்குமமுஞ்சாந்துங்குளிர்ந்தபனிநீரும் (௩௩௭)
தேம்பரத்தையர்பார்காதமனைச்செல்லவிட்டு
வாடுமனையாளைமனம்போற்கொதிக்குதென்றால் (௩௩௮)
என்னபுலம்பியிவள்படும்பாடத்தனையும
அன்னைக்குச்சொன்னாரவளப்பதறிபோடிவந்தாள் (௩௩௯)
பெற்றெடுத்ததன்மகளைப் பேய்க்கிழவியானாலுங்
குற்றமறநோக்கிக்குறிப்புறவேகண்டுகொண்டாள் (௩௪௰)

செவ்வாயிதழ்க்குறியுஞ்செப்புமுலைமேற்பதித்த
கைவ்வாளுகிர்க்குறியுங்கண்மையழிந்ததுவும் (௩௪௧)
பார்த்தாளுடன்போனபாக்கியனாச்சன்னடையிட்டாள்
வேர்த்தாணமகளைவெகுண்டாள்விசாரமிட்டாள் (௩௪௨)
நீங்களறியாமலிந்தநேரிழைப்பூங்காவில்
ஆங்கொருவன்கூடியணைந்தவனாசொல்லுமென்றாள் (௩௪௩)
போனதுவும்வெவ்வேறுபப்பூவெடுக்குமங்கைதனி
ஆனதுவுங்கண்டதுவுமாயிழையார்தாமுரைத்தார் (௩௪௪)
சந்தமுலையாருரைக்கத்தையல்குணமாலைசொல்வாள்
அந்தவனத்திலசுகையுறறவேளையிலே (௩௪௫)
சுற்றியபடிபார்த்தேன்றுரைகளடிபோலதிலே
உற்றசங்கோரையுடன்பதுமரேகைகண்டேன் (௩௪௬)
அச்சுவடுகண்டவசுகைமல்லார்புவனம்
மெய்ச்சுநிலைகோட்டைவேளபெரியநாகேந்திரன் (௩௪௭)
வேட்டைக்குவந்தானுமேளத்தொலியுமந்தக்
சாட்டில்வெடிததொனியுங்காதாரக்கேட்டதென்றாள் (௩௪௮)
அப்படி போசொல்லென்னமிர்தகுணமாலைமின்ன
செப்படிவித்தைத்தொழிலிற்சித்திரதைக்கண்டானோ (௩௪௯)
வண்டார்குழலாய்மதன்பெரியநாகேந்திரன்
கண்டானுனின்றகருமமைவிட்டுப்போவானோ (௩௫௰)
அந்தத்துரையழைக்கக்கண்டாலுநாளின்ற
பெண்டொடியுந்தானொருமைபாராமல்நீள்வாளோ (௩௫௧)
எம்மையறியாமலிவளெப்படிதான்கைகலந்தாள்
நம்மையறியாமலிந்தநாயகனெவ்வாறணைந்தான் (௩௫௨)
கன்னமொருவரிட்டாற்காவலனோடேயுரைப்போம்
மன்னவனேயிந்தவனுமைசெய்தாலார்க்குரைப்பேன் (௩௫௩)
பாகார்மொழியாளைப்பன்றிமலைச்சாரலுக்கு
போகாதேயென்றுசொன்னேன்புத்தியாகெட்டாயோ (௩௫௪)
பேய்வார்த்தையானாலும்பெற்றபிள்ளைகேட்பதுண்டு
தாய்வார்த்தைகேளாததங்கச்சிமூப்பாச்சே (௩௫௫)
தெண்டிக்குமன்னவனைச்சேர்ந்தவனுக்காரியைநான்
தண்டிக்கப்போகாதேகள்ளியெனக்கூடாதே (௩௫௬)
மானபரள்பெஞ்சைககாரானைமருவப்
போனவளேயன்றியிவள்பூவெடுக்கப்போனவாளோ (௩௫௭)
விந்தைதருமொன்பதூர்வேந்தனுக்குமோகினிமா
மந்திரமுண்டென்றன்மதலையறியாளோ (௩௫௮)

தூயபுகழ்பெஞ்சைத்துரைக்குநமைப்போன்மடவார்
ஆயிரம்பேருண்டென்றரக்கியறியாளோ (௩௫௯)
பூங்கொடிசூழ்கன்மலையிற்பூவெடுக்கப்போனவுயிர்ப்
பாங்கிமார்தாமிருக்கப்பாவைதனைச்சேர்வானேன் (௩௬௰)
அந்நாளில்வேதனைமைத்தபடியேயொழிய
மின்னாநோவதுவுமவிணைபிதற்றுவதும் (௩௬௧)
நமையறியாமனடந்ததெல்லாம்பாவருக்கும்
சம்மதிக்குங்காரியமேதைநடத்திவந்தாள் (௩௬௨)
யன்னையழுகுகவென்மகளேமனையாளாம்
நன்னிபழுக்குமந்தக்காவலனேகாதலனும் (௩௬௩)
மாவடுக்கணமங்கையென்னமாதவமுன்செய்தாளோ
பூவெடுக்கப்போனாள்புகைலெடுத்துவந்தாள் (௩௬௪)
பையப்பழனமூவிப்பாலில்விழுந்ததுநான்
செய்ததவமோமகள்முன்செய்தபூஜாபலமோ (௩௬௫)
என்றுமகளையிருகையாற்றுன்றழுவி
ஒன்றாகுமஞ்சாதேயோகமுமுன்பாங்காச்சே (௩௬௬)
சிங்கமகூளேந்த்ரனருள்செய்பெரியநாயகனைச்
சொந்தமாய்க்கூடிச்சுகித்துமிகவாழ்த்திரென்றாள் (௩௬௭)
காவுலவுமின்னேகனகபல்லக்கேறியிந்தப்
பூவுலகுகொண்டாடப்புத்திரனைப்பெற்றிரென்றான் (௩௬௮)
என்னுமந்தவேளைசிலவேந்திழைபார்சூழ்ந்துவர
வன்னமணிப்பொற்சிவிகைவாயில்வரக்கண்டாளே (௩௬௯)
கண்டாள்மகளைக்கனகபல்லக்கேற்றியின்பங்
கொண்டாள்குணமாலைக்கூடச்செலவிடுத்தாள் (௩௭௰)
சொற்படியேயந்தத்துரைப்பெரியநாயகனும்
கற்பகத்தைக்கூட்டியவள்காதல்கொண்டகாதலியாய் (௩௭௧)
பூதலத்தோர்வாழ்த்தநல்லபுத்திரனைப்பெற்றெடுத்து
மாதுநவரத்திநமாலைமகிழ்வுற்றிருந்தாள் (௩௭௨)
சீர்வாழிலோகஞ்செழித்துமிகவாழியொன்ப
தூர்வாழிவெள்ளையுபபக்கொடிவாழி (௩௭௩)
பெஞ்சைநகர்வாழிபெரியநாகேந்த்ரதுரை
கஞ்சமலர்மாதுகருணைபெற்றுவாழியவே (௩௭௪)

கூளம்பநாயக்கன்காதல் — முற்றிற்று.